**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.73/2023**

**13.02.2026. அ.சா.1 மகேஸ்வரி க/பெ. பாடலி**

Accused absent. Petition U/s. 317 Crpc filed and allowed.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். இவ்வழக்கில் சாட்சி பாடலி என் கணவர். அ.சா.5 சரவணராஜா மற்றும் 6 வெங்கட்ராஜா இருவரும் என் மகன்கள் என்றால் சரிதான். எங்கள் கடையின் பெயர் " ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாத்திரம் மற்றும் பர்னிச்சர் கடை "என்றால் சரிதான். எங்கள் கடை போளூர்– வந்தவாசி செல்லும் பிரதான சாலையில் உள்ளது என்றால் சரிதான். அந்த கடை இருக்கும் பகுதி எப்போது ம் போக்குவரத்தும் கூட்ட நெறிசலும் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் கடையில் இருந்து சேத்துப்பட்டு அரசு மருத்துவமனை சுமார் 200 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் கடையில் இருந்து காவல் நிலையம் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். புகாரை நான்தான் எழுதினேன். எங்கள் கடைக்கு அடகு கடை என தனிப்பட்ட போர்டு இல்லை என்றால் சரிதான். நாங்கள் அடகு தொழில் நடத்தவதற்கு உரிமம் பெற்று வந்தோமா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. எதிரி எங்கள் கடையில் போனை அடகு வைத்த தேதி எனது புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எங்கள் கடையில் இருந்து போனை அடகு வைத்தது மற்றும் மீட்டு சென்றது சம்மந்தமான ரசீதை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என் புகாரில் எதிரி என் மாமனாரை முகத்தில் ஒங்கி குத்தி தலையை முட்டி உன்னை சாகடித்து விடுவேன் என்று சொல்லி இருசக்கர வாகனத்தில் ஓடிவிட்டான் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்து 7 வது நாளில்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த 5 நிமிடத்திற்கு பிறகு என் மாமனாரை சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைனக்கு அழைத்து சென்றோம். சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைனக்கு போலிசார் அங்கு வரவில்லை என்றால் சரிதான். என் மாமனாரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசெல்லவில்லை. சேத்துப்பட்டு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஓபி சீட்டோ அல்லது புறநோயாளி சீட்டையோ

தாக்கல்செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் மாமனாரை சென்னை கேளம்பாக்கம் செட்டிநாடு மருத்துவமனையில் என் மாமனாருக்கு வழங்கிய சிகிக்கை சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்தேனா என்றால் கொடுக்கவில்லை. எங்கள் கடையில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்றால் பொருத்தப்படவில்லை. எனது புகாரிலும் , முதல் விசாரணையிலும் எதிரி என் மாமனாரை கடையின் எந்த திசையில் உள்ள சுவற்றில் இடித்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்பு போலிசார் எங்கள் கடையில் வந்து விசாரித்தார்களா என்றால் கடையில் விசாரிக்கவில்லை. போலிசார் செட்டிநாடு மருத்துவமனையில் 26ம் தேதி அன்று விசாரித்தார்கள். நான்சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் மூர்த்தி என்பவர் என் கடைக்கு அன்றைய தினம் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது புகாரில் நேரில் பார்த்த சாட்சிகளை பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சேத்துப்பட்டு அரசு மருத்துவமனைக்கு நானும் என் கணவரும் என் மாமனாருடன் சென்றோம். நான் முதல் விசாரணைக்கு வரும்போது போலிசார் என்னிடம் ஒரு பேப்பர் கொடுத்து அதில் உள்ளது போல் சாட்சி சொல்ல சொன்னார்களா என்றால் இல்லை. கடையில் நடந்ததை சொல்ல சொன்னார்கள் நானும் சொன்னேன். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் நான் மறுக்கிறேன். நான் சம்பவத்தை பார்த்தேன்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.